# இலங்கை இராணுவம்

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## இலங்கை இராணுவத்திற்கு விலங்குணவுகள் / துணைப்பொருட்கள் (Supplements) வழங்குதல் மற்றும் விநியோகிப்பதற்கான விலைமனுக்கோரல் - 2026ஆம் வருடம்

**ஒப்பந்த அடையாள இலக்கம்:** SLA/S&T/03/INTERIM RATIONS/ANIMAL RATIONS/2026(08)

1. பின்வரும் இராணுவ முகாம்களுக்கு 2026-01-01ஆம் திகதி முதல் 2026-12-31ஆம் திகதி வரையான காலத்திற்கு பின்வரும் வகையிலான விலங்குணவுகள் / துணைப்பொருட்கள் வழங்குவதற்கு பத்தரமுல்ல, அக்குரேகொட வீதி, பாதுகாப்பு தலைமையகக் கட்டிடத்தொகுதி, இலங்கை இராணுவ தலைமையகத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் இலங்கை இராணுவத்தின் சார்பாக பெறுகைகள் அழைக்கப்படுகின்றன.

| வகுதி | முகாம்கள் / தலைமையகம் |
|---|---|
| நாய் உணவு | இரத்மலானை |
| | பனாகொட |
| | அநுராதபுரம் |
| | ஹிங்குரக்கொட |
| | பலாலி |
| | முல்லைத்தீவு |
| | கிளிநொச்சி |
| | தியத்தலாவ |
| குதிரை உணவுகள்/ மேலதிக உணவு | தியத்தலாவ |

2. விலைக்கோரல்கள் 2024 - அரசாங்க பெறுகை வழிகாட்டியின் 3.1.2 வாசகத்தின் பிரகாரம் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் ஊடாக மேற்கொள்ளப்படும். உள்நாட்டு விலைமனுதாரர்கள் மட்டுமே விலைகோருவதற்கு அனுமதிக்கப்படுவர். ஒவ்வொரு வகுதி விலங்குணவுகள் / துணைப்பொருட்கள் சகல விபரங்கள் மற்றும் விபரக்குறிப்புகள் விலைமனு ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ளன.

3. விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருக்க வேண்டும் என்பதுடன் பின்வரும் குறைந்தபட்ச தகைமைத் தேவைப்பாடுகளைக் கொண்டிருக்க வேண்டும்.

3.1 எந்தவொரு ஒரு (01) நிதியாண்டிற்கும் முந்தைய இரண்டு (02) ஆண்டுகளுக்குள் விலங்கு உணவு வழங்கல் துறையில் குறைந்தபட்ச சராசரி ஆண்டு வருவாய் 500,000.00 ரூபா அந்தந்த நிதி அறிக்கைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

3.2 குறைந்தபட்சம் 500,000.00 ரூபா திரவ சொத்துக்கள் (விலைமனு சமர்ப்பிக்கப்பட்ட நாள் வரையிலான நிதி அறிக்கைகளின் அடிப்படையில்) (கையில் உள்ள பணம், வங்கியில் பணம், குறுகிய கால முதலீடுகள் மற்றும் கணக்குகள் பெறத்தக்கவை) அந்தந்த நிதி அறிக்கைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

3.3 இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட, வணிக வங்கி, இலங்கையில் செயற்படும் நிதி நிறுவனத்தால் உத்தரவாதம் அளிக்கப்பட்ட (இந்த கேள்விக்கு பிரத்தியேகமாக) கடன் வசதிகளின் குறைந்தபட்ச தொகை 500,000.00. ரூபாவாகவிருக்க வேண்டும்.

3.4 விலங்கு உணவுகள்/ மேலதிக உணவு விடயத்தில், விலைமனுதாரர் போதுமான சேமிப்பு வசதிகள் மற்றும் போக்குவரத்து வசதிகளைக் கொண்டிருக்க வேண்டும் (விலைமனுதாரருக்குச் சொந்தமாக அல்லது குத்தகை/வாடகை அடிப்படையில் போன்றவை).

3.5 கடந்த ஐந்து (5) ஆண்டுகளில் இரண்டு (2) ஆண்டுகளுக்கான விலங்கு உணவு விநியோகத்தில் இதே போன்ற அனுபவம், இதில் எந்தவொரு அரச அல்லது தனியார் நிறுவனத்திற்கும் இதே போன்ற உணவுப் பொருட்களை (மொத்த/சில்லறை வணிகம்) வழங்கியமை தொடர்பான ஒப்பந்தங்களும் அடங்கும்.

3.6 அனைத்து விலைமனுதாரர்களும் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

4. விலைமனு ஆவணங்கள் வழங்கும் திகதி மற்றும் நேரம் மற்றும் விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளல் மற்றும் திறக்கப்படுதல் பின்வருமாறாகும்:

| | | |
|---|---|---|
| அ. விலைமனுக்கள் வழங்க ஆரம்பித்தல் | - | 2025-10-27ஆம் திகதி முதல் |
| ஆ. விலைமனுக்கள் வழங்கப்படும் இறுதி நாள் மற்றும் நேரம் | - | 2025-11-17ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை |
| இ. விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் / சமர்ப்பிக்கப்படும் இறுதி நாள் மற்றும் நேரம் | - | 2025-11-18ஆம் திகதி மு.ப. 11.00 மணி வரை |

5. விலைமனுதாரர் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகளின் பங்குபற்றுதலுடன் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2025-11-04ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு பத்தரமுல்ல, அக்குரேகொட வீதி, பாதுகாப்பு தலைமையகக் கட்டிடத்தொகுதி, இலங்கை இராணுவத் தலைமையகம், வழங்கல் மற்றும் போக்குவரத்து பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெறும்.

6. விலைமனுதாரர் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகளின் பங்குபற்றுதலுடன் பத்தரமுல்ல, அக்குரேகொட வீதி, பாதுகாப்பு தலைமையகக் கட்டிடத்தொகுதி, இலங்கை இராணுவத் தலைமையகம், இலங்கை இராணுவ வாகனத் தரிப்பிடத்தில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு 30 நிமிடங்களின் பின் விலைமனுக்கள் திறக்கப்படும்.

7. மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்துவதன் பேரில் 12ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள முகவரியில் உள்ள இலங்கை இராணுவம், (இராணுவ தலைமையக வாகனத் தரிப்பிட பிரதேசம்) வழங்கல் மற்றும் போக்குவரத்து பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து விலைமனுதாரர்களினால் ஆங்கில மொழியிலான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். ஒவ்வொரு முகாம்/ நிலையத்திற்கான மீளளிக்கப்படாத கட்டணம் 2024 - அரசாங்க பெறுகை வழிகாட்டியின் 6.2 பிரிவின் பிரகாரம் இருக்க வேண்டும். (விலைமனுக்களுக்கான மீளளிக்கப்படாத கட்டண அட்டவணையை இலங்கை இராணுவத்தின் வழங்கல் மற்றும் போக்குவரத்து பணியகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.)

8. விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு, விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ள வடிவத்தை மட்டுமே பயன்படுத்தல் வேண்டும். முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளிலான விலைமனுக்களை தனித்தனியான ஒரு உறையில் இட்டு பதிவுத் தபாலில் அல்லது பத்தரமுல்ல, அக்குரேகொட வீதி, பாதுகாப்பு தலைமையகக் கட்டிடத்தொகுதி, இலங்கை இராணுவத் தலைமையகம், இலங்கை இராணுவ வாகனத் தரிப்பிடத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டு 4ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிர்ணயிக்கப்பட்ட திகதி மற்றும் நேரத்திற்கு முன் சமர்ப்பிக்க வேண்டும்.

9. விலைமனுக்கள் 2026-02-18ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.

10. சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களுடன் இலங்கை இராணுவத் தளபதிக்கு முகவரியிடப்பட்ட மற்றும் 2026-03-18ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறியானது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட (வங்கியின் அசல் கடிதத் தலைப்பில்) நிபந்தனையற்ற, மீளப்பெற முடியாத, கோரிக்கை பிணை முறியாகவிருக்க வேண்டும். குறித்த விலைக்கோரலுக்கான விலைக்கோரல் பிணை முறி தொகையை குறிக்கும் அட்டவணை 2024 - பெறுகை வழிகாட்டியில் பரிந்துரைக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் விலைமனு ஆவணத்துடன் வழங்கப்படும்.

11. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை இலங்கை இராணுவத் தலைமையகத்தின் வழங்கல் மற்றும் போக்குவரத்து பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் மற்றும் 2025-10-27ஆம் திகதி முதல் 2025-11-17ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 03.00 மணி வரையான காலத்தில் பின்வரும் 12ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள முகவரியில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

12. மேற்கூறிய முகவரியானது:

**கவனத்திற்கு :** **வழங்கல் மற்றும் போக்குவரத்து பணிப்பாளர்,**
**இராணுவத் தளபதி,**
**இலங்கை இராணுவத் தலைமையகம்,**
**பாதுகாப்பு தலைமையகக் கட்டிடத்தொகுதி, அக்குரேகொட வீதி, பத்தரமுல்ல.**

**தொலைபேசி :** **011 2302569, 011-2302568**

**மின்னஞ்சல் :** **dtesandt@army.lk**
**dteofsuptender@gmail.com**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**விலங்குணவு / மேலதிக விலைமனுக்கோரல் - 2026ஆம் வருடம்,**
**இலங்கை இராணுவம்.**
**2025-10-26**